கிறது. வியாபாரத்திற்காக என்று சொன்னால் வரி விதிக்கப்படும். அது சம்பந்தமான உத்தரவு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், சில்லரை இறைச்சிக்கு வரி போடக் கூடாது என்ற கோரிக்கையை மிக்க கவனத்தோடு பரிசீலித்து ரத்து செய்து இருப்பதை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சில்லரை வியாபாரிகள் சிலர் சேர்ந்து சந்தைகளில் 40–50 மைல் தூரம் கால்நடையாகக் கொண்டுவர முடியாமல் ஒரு லாரியில் ஏற்றிக்கொண்டு வருகிறபோது மொத்த வியாபாரத்திற்குக் கொண்டு செல்கிறார்கள் என்று சொல்லி வரி போடப்படுகிறது. இந்த நிலையில் உள்ளவர்களுக்கும் அரசு உத்தரவு மூலம் வரி விலக்குத் தரவேண்டும். சில்லரை வியாபாரிகளுக்கு வரி இல்லாது செய்து இருப்பதற்கு நான் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மொத்தமாக சந்தைகளிலிருந்து இறைச்சியை சில்லரை வியாபாரிகளுக்கு கொண்டு செல்லப் படுகிறது என்று தெரிவிக்கப்பட்டால் வரி போடக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்து விட்டது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவரவர்களே, அரசு போட்ட இந்த உத்தரவின் காரணமாக சில்லரை வியாபாரிகளிடமிருந்து வரி வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு உத்தரவு போடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருப்பிக் கொடுத்து விட்டதாக எனக்குக் கவனம். இல்லை என்றால், கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இல. பலராமன் : இது போன்ற இறைச்சிகள் அடுத்த மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டால் எந்த விகிதத்தில் வரி போடப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வேறு மாநிலத்திற்கு எடுத்துச் சென்றால் வரி உண்டு. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

ஆயுள் தண்டனைக் காலம்

* 97 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனைக் கால கைதிகளின் கால வரம்பை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, முதிய வயதில் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளின் தண்டனை காலத்தைக் குறைக்க அரசு ஏதாவது வகை செய்யுமா?

1970 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் முழுவதும் தண்டனை இருக்க வேண்டுமென்று சட்டம். 20 ஆண்டுக் காலம் தண்டனை விதிக்கப்படுகிறது. 3-ல் 2 பங்கு வயதிலே அவர்கள் தண்டனை கழித்து விட்டால் "அட்வைசரி போர்டு" க்கு அனுப்பி பரிசீலித்து, அதற்குப் பிறகு அவர்களை விடலாம் என்று திட்டம் இருக்கிறது. இன்னொரு விதியின் அடிப்படையில் முதிய வயதானவர்களாக இருந்தால் அவர்களையும் முதிய வயது என்ற காரணத்திற்காக "அட்வைசரி போர்டு"க்கு அனுப்பி அவர்கள் சிபார்சு செய்தால் விடுதலை செய்யலாம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஆயுள் தண்டனை என்பதற்கும், ஜீவாந்திர சிட்சை என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன, கால வரம்பு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆயுள் தண்டனை என்பதற்கும், ஜீவாந்திர சிட்சை என்பதற்கும் மொழி வேறு என்பதைத் தவிர வேறு வித்தியாசம் இல்லை.

திரு. என். வரதராஜன் : ஒரு நீண்ட தண்டனை பெறும் ஆயுள் கைதிகளுக்கு 7–8 ஆண்டுகளுக்கு பின்னாலே சலுகை தருவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கும் விதி முறையில் அவர்கள் பொறுப்பில் "கான்விக்ட் வார்டு" என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏராளமான சலுகைகள் இருப்பதாகத்தான் என்னுடைய சிறை அனுபவம் சொல்கிறது.

திருச்சி பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் மகாநாடு

* 98 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழக்குகளை துரிதமாக பைசல் செய்வதற்கு குற்ற சட்டங்களில் உள்ள சில குறைபாடுகளை அகற்ற வேண்டுமென்று; 1969 அக்டோபரில் திருச்சியில் நடந்த தமிழக பப்ளிக் பிராசிக்யூட்டர்களின் மகாநாட்டில் யோசனை சொல்லி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்ததா?

(இ) ஆம் என்றால், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ) இம்மாநில அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், அரசு குற்றவியல் கூட்டு வழக்குரைஞர்கள் மாநாடு 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்றது. சட்ட ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்யவும் குற்றவியல் சட்டம் விதிக் கோவை ஆகியவற்றில் செய்யத்தக்க திருத்தங்கள் குறித்து பரிவுரைகள் செய்யவும் குழு ஒன்றை அமைத்து அம்மாநாடு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அரசு குற்றவியல் வழக்குரைஞர்களின் அடுத்த மாநாட்டில் இப்பரிவுரைகள் கிடைக்கும். இப்பரிவுரைகள் கிடைத்தபின்னரே அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க இயலும்.